## சட்டத்தை மதிக்காத த.வெ.க. அரசு:

# ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சியின் நெறியாளர் விஜயனைக் குறிவைத்திருக்கும் த.வெ.க. அரசு!

## தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம்!

சென்னை, ஜூலை18-

சமூக வலைத்தளத்தில் தவெக அரசின் ஊழல்களை பதிவிட்டால் அவர்களை கைது செய்வது, அரசியல் கண்ணோட்டத்துடன் எதிர்க் கட்சியினரை பழி வாங்குவது என்ற வரிசையில் இப்போது ஊடகவியலாளர் விஜயனை காவல் துறை குறி வைத்திருக்கிறது.



கடத்தல் பாணியில் இழுத்துச் சென்று, அவர் எங்கே இருக்கிறார் என்பதே தெரியாத அளவுக்கு அலைக்கழிக்கிறது. புதிய தலைமுறை தொலைக்காட்சியில் நெறியாளராக உள்ள விஜயனின் செல்போனும் காவல்துறையால் பறிக்கப்பட்டுள்ளது. சட்டத்தை மதிக்காத இந்த நடவடிக்கையை வன்மையாக கண்டிக்கிறோம்.

60 நாள் ஆட்சியின் அராஜக முகம் ஒவ்வொரு நாளும் கொடூரமாக வெளிப்படுகிறது. என் ஆட்சியில் ஜனநாயகத்திற்கும் மரியாதை கிடையாது. ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்க வேண்டிய ஊடகங்களுக்கும் மரியாதை கிடையாது என்று சொல்லாமல் சொல்கிறாரா சி.எம் சார்?

**–தி.மு.க. ஐ.டி. விங்.**

## ஊடகவியலாளர் விஜயன் விவகாரம்:

# கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் முயற்சி!

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்,எச்,ஜவாஹிருல்லா கண்டனம்!

சென்னை, ஜூலை. 18-

மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



புதியதலைமுறை தொலைக்காட்சியின் நெறியாளரும் ஊடகவியலாளருமான விஜயன், விசாரணை என்ற பெயரில் மீண்டும் மீண்டும் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டதோடு, அவரது செல்போன் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள தகவல்கள் கடும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

ஒரு ஜனநாயக நாட்டில் ஊடகவியலாளர்களின் கடமை அதிகாரத்தை கேள்வி கேட்பதும், மக்களுக்குத் தகவல்களை கொண்டு சேர்ப்பதும் ஆகும். ஆனால் அண்மைக் காலமாக விமர்சனக் குரல்களை அடக்குவதற்கும், ஊடகங்களை அச்சுறுத்துவதற்கும் விசாரணை அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன என்ற அச்சம் அதிகரித்து வருகிறது. இந்தச் சூழலில், ஊடகவியலாளர் விஜயன் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை ஊடக உலகிற்கு விடுக்கப்படும் எச்சரிக்கைச் செய்தியாகவே பார்க்கப்படுகிறது.

சட்டத்தின் பெயரால் நள்ளிரவு நேரங்களில் விசாரணைக்காக அழைப்பது, வீட்டிற்குச் சென்ற பிறகும் மீண்டும் வருமாறு வற்புறுத்துவது, சட்ட நடைமுறைகள் குறித்த வெளிப்படைத்தன்மை இன்றி செல்போனை பறிமுதல் செய்வது போன்றவை ஜனநாயக ஆட்சிக்கு ஏற்ற செயல்கள் அல்ல. இது காவல்துறையின் அதிகார துஷ்பிரயோகமாகவும், கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் முயற்சியாகவும் விளங்குகின்றது.

தமிழகம் கருத்துச் சுதந்திரத்திற்கும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் பெயர் பெற்ற மண்ணாகும். அவசரநிலை காலத்தை நினைவூட்டும் வகையில் ஊடகவியலாளர்கள் மீது அழுத்தம் செலுத்தும் போக்கு தமிழகத்தில் உருவாக அனுமதிக்கக் கூடாது. ஊடகங்களை அச்சுறுத்தி மௌனமாக்கும் முயற்சிகள் எந்த அரசுக்கும் நல்ல பெயரை ஏற்படுத்தாது.

எனவே, ஊடகவியலாளர் விஜயனிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ள செல்போன் உடனடியாக திருப்பி வழங்கப்பட வேண்டும். மேலும், விசாரணை என்ற பெயரில் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் மற்றும் அலைக்கழிக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

கருத்துச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் ஜனநாயகத்தின் உயிர்நாடிகள் ஆகும். அவற்றை பாதுகாக்கத் தவறும் எந்த ஆட்சியும் ஜனநாயகத்தின் அடித்தளத்தையே பலவீனப்படுத்தும் என்பதை தவெக அரசு உணர வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## உள்கட்டமைப்பு வசதி முழுமையடையாத

# மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி கிடையாது!

## தேசிய மருத்துவ ஆணையம் அதிரடி

புதுடெல்லி, ஜூலை18-

நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவ கல்லூரிகளில் தேசிய மருத்துவ ஆணையம் திடீர் ஆய்வு செய்தது. இதில், சில கல்லூரிகள் ஆய்வகங்கள் மற்றும் வகுப்பறைகள், நூலகங்கள், மாணவர்களுக்குத் தேவையான தங்கும் விடுதிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்யாமலேயே, வெறும் ஆவணங்களில் மட்டும் அனைத்தும் சரியாக இருப்பது போல் காட்டியது, தகுதிவாய்ந்த பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் மற்றும் மருத்துவமனை பணிகளுக்கான மருத்துவர்களின் எண்ணிக்கை மிக குறைவாக இருப்பது, அதிகாரிகள் ஆய்வு செய்ய வரும் நாட்களில் மட்டும், தற்காலிகமாக பேராசிரியர்களை வெளியில் இருந்து வரவழைத்து, தங்களின் கல்லூரியில் தகுதியான ஆசிரியர்கள் இருப்பதாக காட்டிய முறைகேடுகள், மருத்துவ கல்லூரிகளுடன் இணைக்கப்பட்ட மருத்துவமனைகளில் போதிய நோயாளிகள் இல்லாததால், ஆய்வின் போது மட்டும் வெளியில் இருந்து ஆட்களை கூட்டிவந்து படுக்கைகளில் அமர வைத்தது போன்ற அதிர்ச்சி தகவல்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

இதைத் தொடர்ந்து தேசிய மருத்துவ ஆணையம் புதிய அதிரடி உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அதன்படி, நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவ கல்லூரிகளில், உள்கட்டமைப்பு வசதிகள் 100 சதவீதம் முழுமையாக இருந்தால் மட்டுமே புதிய கல்வி யாண்டில் மாணவர் சேர்க்கைக்கான அனுமதி வழங்கப்படும். ஏதேனும் குறைபாடுகளோ அல்லது போலி பேராசிரியர்கள், நோயாளிகள் போன்ற முறைகேடுகளோ கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட மருத்துவ கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான அனுமதி உடனடியாக மறுக்கப்படும். அவற்றின் உரிமத்தை ரத்து செய்ய கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், அனைத்து மருத்துவ கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு ‘ஆதார் சார்ந்த பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறை’ கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடு செய்யும் அல்லது போதிய வருகைப்பதிவு இல்லாத கல்லூரிகளின் உரிமம் ரத்து செய்யப்படும். கல்லூரியின் முக்கிய பகுதிகள் மற்றும் மருத்துவமனைகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள் மூலம், டெல்லியில் உள்ள தேசிய மருத்துவ ஆணையத்தின் கட்டுப்பாட்டு அறையிலிருந்து நேரடியாக கண்காணிக்கப்படும். உள்கட்டமைப்பு குறைபாடுகள் உள்ள கல்லூரிகள், புதிய இடங்களை உருவாக்குவதற்கோ அல்லது தங்களின் தற்போதைய இடங்களை தக்க வைத்து கொள்வதற்கோ தகுதி பெறாது.

எனவே, மருத்துவ படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், தேசிய மருத்துவ ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளின் பட்டியலை சரிபார்த்து, தங்களின் சேர்க்கையை உறுதிசெய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களின்

# ராஜினாமா ஏற்புக்கு எதிரான வழக்கு!

## சட்டப் பேரவைச் செயலருக்கு நோட்டீஸ்!

சென்னை,ஜூலை.18-

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் தங்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து சமீபத்தில் த.வெ.கவில் இணைந்தனர். இந்நிலையில், அவர்களது ராஜினாமாவை ஏற்று சபாநாயகர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக்கோரி அ.தி.மு.க. கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

கொறடா உத்தரவை மீறி த.வெ.க. அரசுக்கு ஆதரவாக சட்டப்பேரவையில் இருவரும் வாக்களித்திருந்த நிலையில், அவர்களை தகுதிநீக்கம் செய்ய அதிமுக முறையிட்டிருந்த நிலையில், அவர்களது ராஜினாமாவை சபாநாயகர் ஏற்றது விதிகளுக்கு புறம்பானது என மனுவில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

எனவே, இந்த மனு மீது இறுதி முடிவு எடுக்கப்படும் வரை விராலிமலை மற்றும் கரூர் தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்ட விவகாரத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இடைக்கால தடை விதிக்க வேண்டுமெனவும் கோரப்பட்டிருந்தது. இந்த மனு தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த நிலையில், சட்டப்பேரவைச் செயலாளர், மற்றும் இரண்டு விஜயபாஸ்கர்களும் பதிலளிக்க உத்தரவிட்டனர்.

மேலும், ஏற்கனவே நான்கு எம் எல்.ஏக்கள் ராஜினாவை ஏற்றதை எதிர்த்த வழக்குகளுடன், இந்த இரு வழக்குகளையும் சேர்த்து விசாரணைக்கு பட்டியலிட நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

## திராவிடர் கழகத்தின் வேலைத் திட்டங்கள் – தொடர் பரப்புரைகள்!

# மது - சினிமா - கைபேசி - சாதி - பதவி எனும் 5 போதைகள் ஒழிப்புத் திட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிவிப்பு!

சென்னை, ஜூலை. 18-

மக்களிடம் பரவிக் கிடக்கும் ஜாதி மதப் போதை, மதுப் போதை, சினிமாப் போதை, கைப்பேசிப் போதை, பதவிப் போதைகளை ஒழிப்பதை வேலைத் திட்டமாகக் கொண்டு, திராவிடர் கழகம் பாடுபடும் - பிரச்சாரம் செய்யும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

போதை ஒழிப்புப் பிரச்சாரமும், தடுப்பு நடவடிக்கைகளும் மிகமிக இன்றியமையாத காலத்தின் முக்கியத் தேவைகளாக இருக்கின்றன!

### ஆட்சியாளர்களுக்கு அறைகூவலாக இருக்கும் போதைகள்!

சென்ற ஆட்சியானாலும், இன்றைய ஆட்சியானாலும் ஆளுவோருக்குப் பெரும் அறைகூவலாக இருப்பது இந்தப் போதையின் பரவல். அது அங்கிங்கெனாதபடி, வயதில் இளையவர்கள், மாணவர்களையும்கூட அவர்களது எதிர்காலத்தையே பலி பீடத்திற்குக் கொண்டு சென்று, அவர்களை மட்டுமல்லாமல், அவர்களை வளர்க்கும் பெற்றோர், குடும்ப உறுப்பினர்கள், அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, கல்விப் பயிர் வளர்க்க உழைக்கும் ஆசிரியர்கள் தொடங்கி, சட்டம் - ஒழுங்கைப் பராமரித்து, பாதுகாக்கும் கடமையாற்றும் காவல்துறையினருக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும்கூட பெரும் கவலை தரும், பொறுப்பு நீங்கா தலையாய கேள்விக் குறியாகின்றது!

### போதை, வெறும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை மட்டுமல்ல!

இதனை வெறும் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையாக - ஆட்சியாளர் - காவல்துறை கருதக்கூடாது; அதையும் தாண்டி சமூகம் சார்ந்த ஒரு ‘கொள்ளை நோயாகவே’ கூர்ந்து கவனிக்கவேண்டும். இதனை ஒழிப்பது அவ்வளவு எளிதல்ல என்றாலும், மனிதகுல நல்வாழ்வை மிரட்டிய ‘கரோனா’ போன்ற பல லட்சக்கணக்கான உயிர்களைப் பறித்த நோயை ஒழிக்கப் பல மேம்பட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அம்மை, காலரா, பிளேக், சயரோகம் என்ற காசநோய் என்பவற்றைக் கூட ‘ஒழிக்க முடியாது’ என்று ஒரு காலத்தில் கருதப்பட்டன. மருத்துவ அறிவியலாளரது, ஆற்றல்மிகு ஆளுமைமூலம் அவற்றை ஒழித்து வெற்றி கண்டுள்ளோம்.

அதுபோலவே, புற்றுநோய் என்பதையும் ஒழிப்பதற்குத் தீவிர ஆய்வுகளும், தீர்வுகளை நோக்கிய விடியல் பயணமும் வெற்றித் திசை நோக்கி வேக நடைபோடுகின்றன!

### விஞ்ஞானப் பார்வை தேவை!

போதை ஒழிப்பு என்பதற்குத் தற்போது பலரும் ஒரு குறுகிய கருத்தினையே பற்றிக்கொண்டு, அதற்காகவே மட்டும் பேசியும், எழுதியும், பரப்புரை செய்தும், சட்ட நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர். அவற்றிற்கு ஆக்கமும், ஊக்கமுமாய்த் திகழுகிறார்கள்!

பகுத்தறிவாளர்களாக உள்ள பெரியாரிய கருத்தாளர்கள் அதனை விரிவான விஞ்ஞானப் பார்வையோடும் பார்த்து, மிகப்பெரிய இணை போதைகளாலும், சமூக, பொருளாதார, தனி மனித ஒழுக்கத்தை - நலத்தை - பொது ஒழுக்க நாசத்திற்கும் காரண காரியமாய் உள்ள மற்ற ஆபத்தான போதைகளையும் இணைத்து, அவற்றினை வேரோடும், வேரடி மண்ணுமாக ஒழித்திட ஓங்கிய பிரச்சாரத்தினை ஓய்வு ஒழிச்சலின்றி - எதிர்ப்புக்கு அஞ்சாமல் செய்து, தேவைப்படும்போது தம்மையே அர்ப்பணித்துக் கொள்ளும் உறுதி படைத்த ‘செயல் படை’ என்று பகுத்தறிவு, தன்மான, சமூகக் காப்பு அணி ஒன்றினை ஆயத்தப்படுத்த வேண்டிய அரிய தருணம் உள்ளது; இன்றேல், நாடு சுடுகாடு ஆகும்; மக்கள் மாக்கள் ஆவார்கள்.

மதுபோதை, கஞ்சா மற்றும் பல போதைகள் பயன்படுத்தியவர்களை மட்டும்தான் பாதிக்கும். அதிகபட்சம் அவர்தம் குடும்பக் கவலை கூடுதல் கவலையாகும்.

மற்ற நான்கு போதைகள் முந்தையவற்றைவிட, மிகப்பெரும் அளவிற்குச் சமூகத்தையே அழித்துவிடும். அருவருக்கத்தக்க போதைகளே மிக முக்கியம்!

### ஜாதி, மதப் போதைகள்!

ஜாதி போதை - நம் நாட்டையும் தாண்டி, அது அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற புலம் பெயர் ‘ஜாதி முகவர்கள்’ முயற்சியில், எப்படி கஞ்சா, அபின் விற்று லாபம் அடைந்து உலக மாஃபியா கும்பல் வலிமையாக உள்ளதோ, அதே போல, ஜாதி, மதவெறி பரப்பும் கும்பலும் உலக நாடுகளில், நம் நாட்டிலிருந்து அங்குக் குடியேறி, அந்நாட்டு ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றி, ஜாதி வெறியை மிக லாவகமாகப் பரப்பும் நிலை பரவலாகி வருகிறது! ஆணவக் கொலை முதல் அரசியல் கொலை வரை அதன் விளைவு என்பதை எவரே மறுக்க முடியும்?

அதற்கடுத்து மத போதை. மதங்களால், மனித குலம் பிளவுக்கும், பிரிவிற்கும் ஆளாகி, போர்களை அன்றும், இன்றும் நடத்துவதும், அதனால் அப்பாவி மக்கள், அந்த நாட்டிற்கும், மதத்திற்கும் சம்பந்தமில்லாத ஏழை, எளிய உழைக்கும் மக்களும், வர்க்கமும் கடும் விலை கொடுக்கவேண்டிய பேரபாயமாக போர் அபாயமும் இருக்கிறது.

முந்தைய சிலுவைப் போர் (Crusades) என்ற அய்ரோப்பிய மதப் போர் முதல், இப்போது நடக்கும் ஈரான் - இஸ்ரேல், அமெரிக்கப் போர் உள்பட அதன் மூல காரணம், மத வெறி, மதபோதை என்பதில் தொடங்கித்தானே அதிகாரப் போராக மாறியுள்ளது!

### சினிமா, தொலைப்பேசி, கிளப் - இவை பொழுது போக்கு மட்டுமே!

அதற்கடுத்து, சினிமா, கைப்பேசி (செல்போன்) குறிப்பாக இளைஞர்களிடம் இந்தப் போதை.

சினிமா, தொலைக்காட்சி, கிளப் இவை பொழுது போக்குக்குத் தேவைப்படலாம்; ஆனால், வாழ்நாள் பொழுதும் பார்ப்பவர்களை ஈர்த்துள்ளன அந்தப் போதைகள். அவைமூலம் பகுத்தறிவுள்ள மனிதர்கள், பிஞ்சு பருவத்திலிருந்து வயோதிக நிலை வரை - தங்களது ‘சுயத்தை’ பிறருக்கு அடகு வைத்துவிட்டு, ஆடை பறிபோன நிலைகூட அறியாமல், சுதந்தி ரத்தையும், தனித்தன்மையையும் இழந்தும் அதனை அறியாத வகையினராவது என்றால், அது போதையின் தன்மைதானே!

எதுவும் அளவுக்கு மிஞ்சினால் அமுதம் ஆனாலும் நஞ்சுதானே!

### பதவி என்னும் பெரும் போதை!

இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல இந்தத் தலைமுறையில் இன்றைய காலகட்டம் பதவிப் போதை!

எல்லா போதைகளையும் மிஞ்சிய போதை இந்தப் போதையாகும். தடுத்து, வெறுத்து, ஒதுக்கப்பட வேண்டிய பதவி, அதிகார போதையாகும்.

உடுக்கை இழந்தாலும், படுக்கை இழந்தாலும் எது பற்றியும் சற்றும் கூச்சம், வெட்கம், மானம் மறந்த, துறந்த அருவருப்பின் உச்சம் அது!

“மலம் எடுப்பவனுக்கு அதன் கெட்ட வாடை தெரியாது” என்ற தந்தை பெரியார் மொழிக்கேற்ப, பதவிக் களத்தில் புரளுகின்ற பதவிப் போதையாளர்களுக்குத் தங்களது நிர்வாண அசிங்கங்கள் புலப்படுவதே இல்லை.

இதனால், மனிதர்கள் புதுப்புது அரசியல் அவதாரங்கள் எடுக்க சந்தர்ப்ப அரிதாரங்களைப் பூசி, பாமர மக்களை ‘ஜனநாயகம்’ என்ற முகமூடி போட்டு, சமூக, மக்களின் நலன்களை நாளும் அழித்து வருகின்றனர்.

எனவே, இந்த அய்ம்பெரும் போதை ஒழிப்பைத் திராவிடர் கழகம் தனது வேலைத் திட்டமாக - தொடர் பிரச்சாரத்தினை முதற்கட்டமாக நடத்திட திட்டமிட்டு வருகிறது.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

## ரூ.100 கோடி நில மோசடி

# பழனிக்கே மொட்டை போட்ட விஜய் ஆட்சி!

## கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் குற்றச்சாட்டு!

சென்னை,ஜூலை18-

பழனிகோயில் ரூ.100 கோடி நில மோசடி குற்றவாளிகளை காப்பாற்றுகிறார் அறநிலையத்துறை அமைச்சர். த.வெ.க. அரசின் மிகப்பெரிய சதி இது. முன்னுக்குப் பின் முரணாக பேசுகின்றனர் அமைச்சர்கள் என்றும் பழனி கோயில் நில மோசடியில் பினாமி பரிவர்த்தனை நடந்துள்ளது. பழனிக்கே மொட்டை போட்ட ஆட்சி விஜய் ஆட்சி என்றும் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் குற்றம் சாட்டினார்.



பழனி தண்டாயுதபாணி கோவிலுக்குச் சொந்தமான 100 கோடி ரூபாய் நில மோசடி, த.வெ.க. அரசின் திட்டமிட்ட ஊழல் என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில், திமுக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன், செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, பழனி தண்டாயுதபாணி கோவிலுக்குச் சொந்தமான நில மோசடியில் மிகப் பெரிய சதி காணப்படுவதாகவும், இதில் பினாமி பரிவர்த்தனை நடைபெற்றுள்ளதாகவும் கூறினார்.

நில மோசடி விவகாரத்தில் அறநிலையத் துறை மற்றும் பத்திரப்பதிவு அமைச்சர்கள் முன்னுக்குப் பின் முரணாக பேசுகின்றனர் என்றும், குற்றவாளிகளை காப்பாற்ற அமைச்சர் ரமேஷ் முயல்வதாகவும் பரந்தாமன் குற்றம் சாட்டினார்.

மேலும், பழனிக்கே மொட்டை போட்ட ஆட்சி விஜய் ஆட்சி! என்றும் அவர் விமர்சித்தார்.

மேலும் பேசிய பரந்தாமன், கோவில் நிலத்தை பத்திரப்பதிவு செய்ய மறுத்த பதிவாளரை மாற்றி, மற்றொரு பதிவாளரை வைத்து பதிவு செய்தது ஏன் என்றும், பத்திரப் பதிவு செய்த அதிகாரியை கைது செய்யாதது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். நில மோசடியில் பதிவு செய்ததாக கூறப்படும் இரண்டு நபர்கள் யார்? அவர்களை காட்ட மறுப்பது ஏன்? என்று வினவிய பரந்தாமன், இந்த சதிச் செயலில் ஈடுபட்டது யார் என்பதை அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பத்திரப்பதிவில் வைக்கப்படும் போட்டோக்களை வெளியிட த.வெ.க. அரசு மறைப்பது ஏன் என்றும், பழனி நில மோசடி விவகாரத்தில் பெரிய மோசடி நிகழ்ந்துள்ளது உறுதியாகியுள்ளதாகவும் பரந்தாமன் தெரிவித்தார்.

## அரசு கலை – அறிவியல் கல்லூரிகளில் –

# ஆகஸ்ட் மாதத்துக்குள் முதல்வர் பணியிடங்கள் நிரப்பப்படும்!

## கல்லூரிக் கல்வி ஆணையரகம் தகவல்!

சென்னை, ஜூலை. 18-

தமிழ்நாட்டில் 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளும் 7 அரசு கல்வியியல் கல்லூரிகளும் உள்ளன. இவற்றில் 58 கல்லூரிகள் கிரேடு 1 கல்லூரிகள், எஞ்சிய 130 கல்லூரிகள் கிரேடு 2 கல்லூரிகள். இந்நிலையில், 25 கிரேடு1 கல்லூரிகளிலும், 100 கிரேடு2 கல்லூரிகளிலும் நீண்ட காலமாக முதல்வர் பணியிடங்கள் காலியாகவுள்ளன. இதுதவிர கிரேடு1 கல்லூரி முதல்வர் நிலையில் 2 மண்டல இணை இயக்குநர் பதவியும் காலியாக இருக்கிறது.

அரசு கல்லூரிகளில் நீண்ட காலமாக காலியாகவுள்ள உள்ள முதல்வர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இதுகுறித்து கல்லூரி கல்வி ஆணையரகத்தில் கேட்டபோது, “கிரேடு1 அந்தஸ்து கல்லூரிகளில் முதல்வர் பதவி காலியாகவுள்ள 24 இடங்களில் முதல்கட்டமாக 12 இடங்களை நிரப்புவதற்கான தகுதி பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, விரைவில் அந்த காலியிடங்கள் நிரப்பப்பட்டுவிடும். அதேபோல், எஞ்சிய கிரேடு1 கல்லூரிகளிலும் கிரேடு2 காலியிடங்களிலும் ஆகஸ்ட் மாதத்துக்குள் முதல்வர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பபட்டுவிடும். இந்த பணியை ஆகஸ்ட் 15ம் தேதிக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளோம்” என்றனர்.